செ.வெ.எண்: 31-2020 நாள்:23.07.2020

**விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர், கண்டாச்சிபுரம் மற்றும் அரகண்டநல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தொற்று பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இன்று (23.07.2020) விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் வட்டத்திற்குட்பட்ட மேலமங்கலம், சித்தலிங்கமடம் கிராமம், அரகண்டநல்லூர் பேரூராட்சி மற்றும் கண்டாச்சிபுரம் வட்டத்திற்குட்பட்ட மனம்பூண்டி கிராமத்தில் கொரோனா வைரஸ் நோய் தொற்று பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது மேலமங்கலம் கிராமத்தில் கொரோனா வைரஸ் நோய் தொற்று பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான தமிழக அரசு வழங்கியுள்ள விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை பொதுமக்களிடம் வழங்கும் பணியினை பார்வையிட்டு. தொடர்ந்து அதே பகுதியில் கொரோனா நோய் தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ள பகுதியில் சிறப்பு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளும் மருத்துவ குழுவினரிடம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆலோசனை மேற்கொண்டு அப்பகுதியில் வசிக்கக்கூடிய பொதுமக்களிடம் அரசு அறிவிறுத்தியுள்ள பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றி கொரோனா நோயிலிருந்து பாதுகாப்பாக வாழ்வோம் என மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து திருவெண்ணெய்நல்லூர் கடைவீதி பகுதியில் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்வதற்கு இடையூறு ஏற்படுத்தும் வண்ணம் சிறு வியாபாரிகள் மற்றும் வியாபாரிகள் சாலையோரங்களில் ஆக்கிரமிப்பு மேற்கொண்டு அமைக்கப்பட்டுள்ள கடைகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் உடனடியாக அப்புறப்படுத்த சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து சித்தலிங்கமடம் பகுதியில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டிருந்த பொதுகழிப்பிடம் பூட்டப்பட்டிருந்ததை பார்த்த மாவட்ட ஆட்சியர் அவர்கள் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்ளிடம் பூட்டப்பட்டிருந்ததற்கான காரணத்தினை கேட்டறிந்து உடனடியாக சரிசெய்யும் பணியினை மேற்கொள்ள உத்தரவிட்டார். இதனை தொடர்ந்து அப்பகுதியில் ஆய்வு மேற்கொள்ளும்போது அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு சாலை வசதியில்லாமல் இருப்பதை பார்த்த மாவட்ட ஆட்சியர் அவர்கள் உடனடியாக சாலை வசதியினை மேம்கொள்ளவும் மற்றும் அப்பகுதியில் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை அகற்றிடவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இதனை தொடர்ந்து அரகண்டநல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தொற்று பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் நியாய விலை கடைகள் மூலம் வழங்கப்படும் நடப்பு மாதத்திற்கான விலையில்லா ரேஷன் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளதா என மாவட்ட ஆட்சியர் அவர்கள் பொதுமக்களிடம் நேரில் கேட்டறிந்தார்.

இதனை தொடர்ந்து கண்டாச்சிபுரம் வட்டத்திற்குட்பட்ட மனம்பூண்டி கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கொரோனா வைரஸ் நோய் தொற்று கண்டறியும் சிறப்பு பரிசோதனை முகாமினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டார். அப்பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் போதுமான இடவசதி இல்லாததை கண்ட மாவட்ட ஆட்சியர் அவர்கள் உடனடியாக அருகாமையில் அமைந்துள்ள அரசு சேவை மைய கட்டிடத்தில் கொரோனா சிறப்பு பரிசோதனை மையத்தினை அமைத்துக்கொள்ள உத்தரவிட்டார். தொடர்ந்து அப்பகுதி சாலையில் ஆய்வு மேற்கொண்டபோது அதிகப்படியான பயணிகளை ஏற்றிக்கொண்டு பயணம் மேற்கொண்ட ஆட்டோவினை உடனடியாக பறிமுதல் செய்ய உத்தரவிட்டு அப்பகுதியில் இரண்டு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனத்தின் மூலம் செல்லும் பொதுமக்கள் முகக்கவசம் அணியாமல் செல்வதை கண்ட மாவட்ட ஆட்சியர் அவர்கள் கொரோனா நோய் தொற்றின் தாக்கத்தினை பற்றி அறிவுறுத்தி இதுபோன்ற பொதுப்பயன்பாட்டிற்கு செல்பவர்கள் முகக்கவசம் அணியாமல் சாலையில் செல்பவர்களை வழக்குப்பதிவிடவும் அப்பகுதி வழியாக நான்கு சக்கர வாகனம் மற்றும் பொதுவாகனங்கள் மூலம் பயணம் மேற்கொள்வோர் முறையான இ - பாஸ் பெற்றுதான் பயணம் மேற்கொள்ளப்படுகிறார்களா என்பதனையும் காவல்துறையினர் கண்காணிக்கப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்தரவிட்டார்.

தொடர்ந்து முகையூர் ஒன்றியத்திற்குட்பட்ட வீரபாண்டி கிராமத்தில் கொரோனா வைரஸ் நோய் தொற்று பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதியினை நேரில் பார்வையிட்டு அப்பகுதியில் நோய் தொற்று பரவலை கட்டுப்படுத்த கிருமி நாசினிகள் தெளிக்கும் பணியினை அதிகப்படுத்த வேண்டும் எனவும், பொதுமக்கள் அவரவர் வசிக்கக்கூடிய வீட்டை விட்டு மற்ற வீட்டிற்கு சென்று வருவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்**